# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண் 5/2018

பெயர்: சின்னராசு நாள் : 12.08.2022

வா.சா.1 – 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – சின்னராசு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

முந்தைய குறுக்கு விசாரணையில் நான் பெற்று என் கைவசம் உள்ளதாக கூறி பட்டா மற்றும் வில்லங்க சான்றிதழை இன்று தாக்கல் செய்கிறேனா என்றால், இன்று நான் அதை கொண்டுவரவில்லை. நான் பட்டா மற்றும் வில்லங்க சான்றிதழை பெற்று பரிசீலனை செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக பட்டா மற்றும் வில்லங்க சான்றிதழை பார்த்தேன் என்று கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அதனால்தான் நான் பட்டா மற்றும் வில்லங்க சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் இன்றைய தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்கள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்ததாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு பாகப்பிரிவினை செய்யும்பொழுது எந்தெந்த சர்வே எண்களில் உள்ள சொத்து யார் யாருக்கு சென்றது என்று வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் நான் கூறவில்லை. இன்றைய தேதியிலும் எனது தகப்பனாருக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றும், பெருமாள் மற்றும் பெரியண்ணன் ஆகியோர்களுக்கு எந்தெந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 3/2017 என்ற வழக்கில் எதன் அடிப்படையில் வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், எனது தாத்தா பெயரில் இருந்த சொத்தை பார்த்து எழுதினேன். நான் சித்தன் பெயரில் இருந்த கிரைய பத்திரத்தை பார்த்து அந்த சொத்து விபரத்தை எழுதினேன். என் தகப்பனார் பெயரில் பெருமாள் என்பவர் எழுதிய உயில் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அதை நான் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நகல் எடுத்து பார்த்தேன். அதை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக நகல் எடுத்து பார்த்தேன். அந்த உயில் ஆவணம் ஒரு பதிவு செய்யப்பட்ட ஒன்றாகும். அதில் மாரியம்மாள் மற்றும் பெரியண்ணன் என்பவர்கள் கைரேகை போட்டுள்ளார்கள். பழனிகவுண்டர் என்பவர் கையெழுத்து போட்டுள்ளார். சாட்சியாக கை ரேகை வைத்ததாக சொல்லும் பெரியண்ணன் என்பவர் என்னுடைய தகப்பனாரின் சகோதரர் என்றால், சரிதான். பெரியண்ணன் என்பவர் என்னுடைய தகப்பனாருடன் இறுதி காலம் வரை பேச்சுவார்த்தையில் இருந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னிடம்

அவ்வப்பொழுது வந்து பேசுவார். சாட்சி மாரியம்மாள் என்னுடைய தகப்பனாரின் சகோதரி என்றால், சரிதான். மாரியம்மாள் என் தகப்பனாருடன் இறுதி காலம் வரை பேச்சுவார்த்தையில் இருந்தாரா என்பது எனக்கு தெரியாது. என்னுடனும் அவர் பேச்சுவார்த்தையில் இல்லை. 1 முதல் 7 பிரதிவாதிகள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை நான் படித்து பார்க்கவில்லை. அதனால் அவர்கள் பதிலுரையில் கூறியுள்ள விபரங்கள் உண்மையானதா அல்லது பொய்யானதா என்று கூறமுடியுமா என்றால், அதை படித்து பார்த்தால்தான் எனக்கு தெரியும். 1 முதல் 7 பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியாமல்தான், நான் முதன்மை சாட்சியம் அளித்துள்ளேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் அசல் வழக்கு எண் 161/2004, அசல் வழக்கு எண் 189/2006 மற்றும் அசல் வழக்கு 316/2008 என்ற வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டு 1 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு தமிழ் சிறிதளவு எழுத படிக்கத் தெரியும். நான் எனது பெற்றோர்கள் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றாலும், அதனால் மேற்கண்ட 3 வழக்குகள் பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், அவ்வாறு தெரிந்த விபரத்தினை இந்த நீதிமன்றத்தில் கூறினால், அது எனக்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால்தான், எதிர் வழக்குரை சங்கதிகள் என்னவென்று எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 1 முதல் 7 பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் என்பதால்தான், நான் முதன்மை சாட்சியத்தில் அவைகள் பொய்யானவைகள் என்று மறுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனது தாயார் 1. 2 பிரதிவாதிகள் பெயரிலும், எனது தகப்பனாரின் சகோதரர் பெரியண்ணன் பெயரிலும் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி மாண்புமிகு சார்பு நீதிமன்றம், சங்ககிரியில் அசல் வழக்கு எண் 296/1998 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கை எனது தாயார், எனது தகப்பனாரின் சகோதரரான அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பொறுத்து கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுப்பதாகவும், அந்த கிரைய ஒப்பந்தத்தை பின்னிட்டு, 1 ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் எழுதி கொடுத்தாகவும் குறிப்பிட்டு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண் 296/1998 என்ற வழக்கானது பண வரம்பிற்காக பின்பு இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அந்த வழக்கானது அசல் வழக்கு எண் 161/2004 ஆக இந்த நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. அசல்

வழக்கு எண் 161/2004 ல் எனது தாயார் கமலா என்பவர்மீது ஏற்படுத்தப்பட்டதாக கூறும் கிரைய ஒப்பந்தப் பத்திரம் மோசடியானது, பொய்யானது என்றும், 1 ம் பிரதிவாதி மீது 17.04.1998 தேதியிட்டு ஏற்படுத்தப்பட்ட கிரையப் பத்திரம் சட்டப்படியானது என்று தீர்ப்பு கடந்த 29.9.2004 வழங்கப்பட்டது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த தீர்ப்பிற்கு பின்னிட்டு எனது பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகள் 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்களில் அவர் அனுபவம் செய்வதற்கு இடைஞ்சல் செய்ததால், 1 ம் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 189/2006 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்தார் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண் 189/2006 வழக்கில் கடந்த 10.01.2018 ம் தேதியில் 1 ம் பிரதிவாதிதான் அந்த வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருக்கிறார் என்று தீர்மானித்து, அந்த வழக்கில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் எனது பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளுக்கு எதிராக வழங்கப்பட்டது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எனது பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும் என்பதால், என்னை முன்னிறுத்தி மோசடி ஆவணங்கள் தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனாரின் சகோதரி மாரியம்மாள் வழக்கு சொத்து மற்றும் மற்ற சொத்துக்களில் தனக்கு பாக உரிமை உள்ளது என்று கோரி அசல் வழக்கு எண் 316/2008 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியும். அசல் வழக்கு எண் 189/2006 மற்றும் அசல் வழக்கு எண் 316/2008 எனது தகப்பனார் தரப்பினராக இருந்தபோதும், அசல் வழக்கு எண் 161/2004 என்ற வழக்கில் என் தாயார் வாதியாக இருந்தபோதும், எனது தகப்பனாரின் சகோதரர் பெருமாள், எனது தகப்பனார் பெயரில் உயில் எழுதி வைத்திருந்ததாக எந்தவிதமான வாதமும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. பெருமாள் என்பவர் ஒருபோதும் எனது தகப்பனார் பெயரில், வழக்கு சொத்துக்களை பொறுத்து உயில் ஆவணம் எழுதி வைக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எனது தகப்பனார் சொத்துக்களை அனுபவிக்க வில்லையென்றாலும், மேற்படி மூன்று வழக்குகளிலும் என் தகப்பனாருக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுவிடும் என்று கருதி வா.சா.ஆ.2, 3 ஆவணங்களை நானும், எனது தகப்பனாரும் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் மோசடியாக ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2, 3 நீதிமன்ற நடவடிக்கைகளில் அவற்றில் வழக்கு சொத்துக்களை பொறுத்து இந்த நீதிமன்றத்தில் முன்னமே நிலுவையிலிருந்த அசல் வழக்கு எண் 189/2006 மற்றும் அசல் வழக்கு எண் 316/2008 என்ற வழக்குகளை பற்றியோ அசல் வழக்கு எண் 161/2004 ல்

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை பற்றியோ, மோசடியாக குறிப்பிடாமலும், 1 ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்காமல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2, 3 நடவடிக்கைகளில் 1 ம் பிரதிவாதி தரப்பினர் இல்லையென்பதால், வழக்கு சொத்துக்களில் 1 ம் பிரதிவாதிக்கு உள்ள பாத்தியத்தை மேற்படி ஆவணங்கள் எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல. உண்மையாக பெருமாள் என்பவர் உயில் ஆவணம் எழுதி வைத்திருந்தால், பெருமாளின் 2 ம் நிலை வாரிசுகளான எனது தகப்பனாரின் மற்ற சகோதர சகோதரிகளை வா.சா.ஆ.2, 3 நடவடிக்கைகளில் ஒரு தரப்பினராக சேர்த்திருப்போம் என்றாலும், உயில் ஆவணத்தை மோசடியாக அவர்களுக்கு தெரியாமல் தயார் செய்ததால்தான், அவர்களை ஒரு தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மையாக பெருமாள் எனது தகப்பனார் பெயரில் 03.08.1992 தேதியில் உயில் எழுதி வைத்திருந்தால், அதில் மாரியம்மாள் சாட்சியாக கைரேகை வைத்திருந்தாலோ, மேற்படி மாரியம்மாள் இந்த நீதிமன்றத்தில் எனது தகப்பனாருக்கு எதிராக தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண் 316/2008 வழக்கில் என் தகப்பனார் மேற்படி உயிலைப்பற்றியும், அந்த உயிலில் மாரியம்மாள் சாட்சியாக கைரேகை வைத்ததை பற்றியும் குறிப்பிட்டிருப்பார் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி வழக்கு நடவடிக்கைகளுக்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்பதால்தான், அந்த வழக்குகளில் உயிலைப்பற்றி எந்த விபரத்தையும் குறிப்பிடவில்லை என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் எனது தாத்தாவின் பூர்வீக சொத்துக்கள் என்பதால், எனது தகப்பனாரும் அவரது இரண்டு சகோதரர்களும் அவர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினைப்படி தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றாலும், பின்னிட்டு பெருமாள் என்பவருக்கு தொழுநோய் ஏற்பட்டதால், அவருடைய சொத்தை எனது தகப்பனாரும், அவருடைய சகோதரர் பெரியண்ணனும் பாதி பாதியாக அனுபவித்து வந்தார்கள் என்றால், எனது தகப்பனார் மட்டுமே கடைசி வரை அனுபவித்து வந்தார். பெருமாள் சாகும்வரை அவருடைய சகோதர சகோதரிகளின் பராமரிப்பில் இருந்தார் என்றாலும், அதனால் எனது தகப்பனார் பெயரில் உயில் எழுதவேண்டிய எந்த அவசியமும் இல்லையென்றாலும், சரியல்ல.

ஒப்பம் / சின்னராசு

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.